**ஏப்ரல் – 17**

# TNPSC துளிகள்

- சண்டிகர் நகரமானது சமீபத்தில் சைக்கிள் ஓட்டுதலுக்கான இந்த வகையில் தனது முதலாவது வரைவுக் கொள்கையை வெளியிட்டுள்ளது.
  - இந்தியாவில் இவ்வாறு ஒரு நகரம் சைக்கிள் ஓட்டுதலுக்கான கொள்கையை உருவாக்கியது இதுவே முதல் முறையாகும்.
- உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் இணைந்து ஏழை நாடுகளுக்குப் பாதுகாப்பு மற்றும் பருவநிலை நடவடிக்கைகளுக்கான நிதி குறித்து ஆலோசனை வழங்குவதற்கான ஒரு தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளன.
  - ஏழை நாடுகளின் கடன் சுமைகளைக் குறைப்பது குறித்த பேச்சுவார்த்தைகளில், பருவநிலை மாற்றத்தை நோக்கிச் செயல்பட இரு நிதி அமைப்புகளும் இந்தத் தளத்தைப் பயன்படுத்தும்.
- சிலி நாட்டில், ஹரு ஒனி (Haru Oni) என்ற திட்டத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டில் eFuel என்ற எரிபொருளை உற்பத்தி செய்ய போர்ஷே நிறுவனமானது சீமென்ஸ் எனர்ஜி என்ற நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
  - eFuel என்பது புதிதாக வளர்ந்து வரும் கார்பன் நடுநிலை எரிபொருள்கள் மற்றும் ஹைட்ரோ கார்பன் எரிபொருளைச் சேர்ந்ததாகும்.
- 2020-21 காலப்பகுதியில் பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனாவை வெற்றிகரமாக அமல்படுத்தியதற்காக ஜம்மு-காஷ்மீரின் உதம்பூர் ஆனது தேசிய அளவில் முதலிடம் வகிக்கிறது.
  - பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா என்பது கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தினால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும், இது வறுமைக் குறைப்பு என்ற யுக்தியின் ஒரு பகுதியாக சாலை இணைப்பில்லாத கிராமங்களுக்கு அனைத்து வானிலைகளுக்கும் ஏற்ற சாலை இணைப்பினை வழங்குகிறது.

# தேசியச் செய்திகள்

## போஷன் கியான்

- இது உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த தேசிய டிஜிட்டல் தரவுக் களஞ்சியமாகும்.
- அசோகா பல்கலைக்கழகத்தின் சமூகம் மற்றும் நடத்தை மாற்றத்திற்கான மையம், பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் நிதி ஆயோக் ஆகியவை இணைந்து கூட்டாக இதை அறிமுகப்படுத்தியது.

## HGCO19

- இந்தியாவின் எம்.ஆர்.என்.ஏ அடிப்படையிலான கோவிட் -19 சோதனை தடுப்பூசியான - HGCO19 என்பதின் மருத்துவ ஆய்வுகளுக்காக அது கூடுதல் அரசாங்க நிதியுதவியைப் பெற்றுள்ளது.
- இந்த நிதி ‘மிஷன் கோவிட் சுரக்சா’ என்ற திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் எச்.டி.டி பயோடெக் கார்ப்பரேஷனுடன் இணைந்து புனேவைச் சேர்ந்த உயிரித் தொழில்நுட்ப நிறுவனமான ஜெனோவா பயோஃபார்மாசூட்டிகல்ஸ் நிறுவனம் இதை உருவாக்கியுள்ளது.




## ஹால்மார்க் தர நெறிகள்




- 2021 ஆம் ஆண்டு ஜூன் 1 முதல் தங்கத்திலான கலைப்பொருட்கள் மற்றும் தங்க நகைகளைக் கட்டாயமாக தர அடையாளப் படுத்துவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போது, தங்கத்தின் தரத்தைக் குறிப்பிடுவது நாட்டில் தன்னார்வமாக உள்ளது.
- தங்க நகைகள் மற்றும் கலைப்பொருட்களுக்குத் தங்க ஹால்மார்க்கிங் (தரக்குறியீடு) ஆனது தூய்மைச் சான்றிதழை வழங்குகிறது.
- இந்தப் புதிய விதிமுறைகளின் கீழ் மூன்று தர நகைகள் மட்டுமே இப்போது குறிக்கப் படுகின்றன.
- அவை 14 காரட், 18 காரட் மற்றும் 22 காரட் ஆகும்.
- முன்னதாக, பத்து வகையிலான தரங்களில் தங்க நகைகள் ஹால்மார்க் செய்யப் பட்டன.
- புதிதாகக் கொண்டு வரப்படும் தங்கத்திற்கான ஹால்மார்க் தரக்குறியீடானது நான்கு குறியீடுகளைக் கொண்டிருக்கும்.
- அவை தூய்மை (காரட்டில்), பிஐஎஸ் குறியீடு, மதிப்பீட்டு மையத்தின் பெயர் மற்றும் நகைக்கடைக்காரரின் அடையாளக் குறியீடு என்பதாகும்.

- இந்தியத் தர நிர்ணயச் சட்டம், 2016 என்ற சட்டமானது இந்தியாவில் தங்க ஹால்மார்க்கிங் முறையைக் கட்டாயமாக்கியது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கத் துருப்புக்களைத் திரும்பப் பெறுதல்

- ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தனது அனைத்து துருப்புக்களையும் திரும்பப் பெறப் போவதாக அமெரிக்க அதிபர் பிடன் சமீபத்தில் அறிவித்தார்.
- அமெரிக்கா அறிவித்த புதிய காலக்கெடு 09/11 தாக்குதல்களின் இருபதாம் ஆண்டு நிறைவுடன் ஒத்துப் போகிறது.
- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், அமெரிக்காவும் அதன் நேட்டோ நட்பு நாடுகளும் பதினான்கு மாதங்களில் அனைத்துத் துருப்புக்களையும் திரும்பப் பெறுவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

# பொருளாதாரச் செய்திகள்


## சிறப்பு மறுநிதியளிப்பு வசதி 2021

- தேசிய வீட்டுவசதி வங்கியானது சமீபத்தில் "சிறப்பு மறுநிதியளிப்பு வசதி" 2021 என்ற வசதியினை அறிமுகப்படுத்தியது.
- இந்த வசதிக்கு ரூ.10,00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- வீட்டுவசதி நிதி நிறுவனங்கள் மற்றும் பிற தகுதி வாய்ந்த முதன்மை கடன் வழங்கும் நிறுவனங்களுக்குக் குறுகிய கால மறுநிதியளிப்பு ஆதரவை வழங்குவதே இந்த வசதியின் முக்கிய நோக்கமாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விலங்குவழித் தொற்று மீதான WHO வழிகாட்டுதல்கள்

- உலக சுகாதார அமைப்பு, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் விலங்கு ஆரோக்கியத்திற்கான உலகளாவிய அமைப்பு ஆகியவை இந்தப் புதிய வழிகாட்டுதல்களை வகுத்துள்ளன.
- விலங்குவழித் தொற்று (ஜூனோசிஸ்) என்பது ஒரு தொற்று நோயாகும், இது விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவுகிறது.
- இந்த நோய்க் கிருமிகள் வைரஸ், பாக்டீரியா அல்லது ஒட்டுண்ணியாக இருக்கலாம்.
- அவை நேரடித் தொடர்பு, நீர், உணவு மற்றும் சுற்றுச்சூழல் மூலம் மனிதர்களுக்குப் பரவுகின்றன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## FSRU

- இந்தியாவின் முதல் மிதக்கும் சேமிப்பு மற்றும் மறுவளிமயமாக்கல் பிரிவு (FSRU - Floating Storage and Regasification Unit) மகாராஷ்டிராவின் ரத்னகிரி மாவட்டத்தில் உள்ள எச்-எனர்ஜியின் ஜெய்கர் முனையத்திற்கு வந்துள்ளது.
- FSRU அடிப்படையிலான திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு முனையங்கள் ஆனது இயற்கை எரிவாயு இறக்குமதி திறனின் வேகத்தைச் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு எதுவு ஏற்படாத வகையில் மற்றும் திறமையான முறையில் மேம்படுத்துவதற்கான திறனை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இந்தத் துறைமுகமானது மகாராஷ்டிராவின் முதல் ஆழமான மற்றும் 24 × 7 மணி நேரமும் செயல்படும் ஒரு தனியார் துறைமுகமாகும்.
- இது 56 கி.மீ நீளமுள்ள ஜெய்கர்-தபோல் இயற்கை எரிவாயுக் குழாய்க்கு மறுவளிமயமாக்கல் செய்யப்பட்ட திரவ இயற்கை எரிவாயுவை வழங்கும்.

## நிதி நிறுவனங்களுக்கான பருவநிலை மாற்ற மசோதா

- நியூசிலாந்து சமீபத்தில் நிதி நிறுவனங்களுக்கான பருவநிலை மாற்றம் குறித்த மசோதாவை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த மசோதாவானது உலகிலேயே முதல் வகையானதாகும்.
- நியூசிலாந்து நாடானது கார்பனை வெளியிடுவதில் நடுநிலையாக மாறுவதற்கான காலக்கெடுவாக 2050 ஆம் ஆண்டை நிர்ணயித்துள்ளது.

## ஹைட்ரஜன் வட்டமேஜை

- முதல் மாதிரியான ஹைட்ரஜன் வட்டமேஜையானது "ஹைட்ரஜன் பொருளாதாரம் - புது தில்லி பேச்சுவார்த்தை 2021" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ், எரிசக்தி மன்றம் (TEF) மற்றும் இந்தியப் பெட்ரோலியத் தொழில் கூட்டமைப்பு (FIPI - Federation of Indian Petroleum Industry) ஆகியவற்றால் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ஹைட்ரஜன் பொருளாதாரம் என்பது ஒரு நாட்டின் ஆற்றல் மற்றும் சேவைகளில் கணிசமான பகுதியை வழங்கும் வணிக எரிபொருளாக ஹைட்ரஜனை நம்பியுள்ள

ஒரு பொருளாதாரமாகும்.

- 'ஹைட்ரஜன் பொருளாதாரம்' என்ற சொல் 1970 ஆம் ஆண்டில் ஜான் போக்ரிஸால் உருவாக்கப் பட்டது.


# முக்கிய தினங்கள்

## ICCR நிறுவப்பட்ட நாள் - ஏப்ரல் 09

- இந்தியக் கலாச்சார உறவுகளுக்கான மன்றமானது (ICCR - Indian Council for Cultural Relations) தனது 71வது அறக்கட்டளை தினத்தை கொண்டாடுகிறது.
- இது 1950 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரான மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களால் நிறுவப்பட்டது.
- இது ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இது இந்தியாவிற்கும் உலகிற்கும் இடையிலான கலாச்சார உறவுகள் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு ஆகியவற்றை வளர்ப்பது மற்றும் பலப்படுத்துவது என்ற நோக்கத்துடன் உள்ளது.
- மற்ற நாடுகளுடனும் மக்களுடனும் கலாச்சாரப் பரிமாற்றங்களை மேம்படுத்தச் செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1965 ஆம் ஆண்டில் இந்திய அரசால் நிறுவப்பட்ட சர்வதேச புரிதலுக்கான ஜவஹர்லால் நேரு விருதையும் நிர்வகிக்கிறது.

## தெருவாழ் குழந்தைகளுக்கான பன்னாட்டு நாள் - ஏப்ரல் 12

- இது 2012 ஆம் ஆண்டு முதல் உலகளவில் கொண்டாடப் படுகிறது.
- இது தெருவாழ் குழந்தைகளின் மனிதநேயம், கண்ணியம் மற்றும் எதிர்ப்பு உணர்வு ஆகியவற்றை அங்கீகரிப்பதற்காகக் கொண்டாடப்படுகிறது.
- குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தில் (1990) தெருவாழ் குழந்தைகளுக்கும் உரிமை உண்டு.



## 37வது சியாச்சின் தினம் - ஏப்ரல் 13

- 1984 ஆம் ஆண்டின் இந்த நாளில், ஆபரேஷன் மேகதூத் என்ற நடவடிக்கையைத் தொடங்கும் விதமாகப் பிலாஃபாண்ட் லா என்ற கணவாயில் இந்தியத் துருப்புக்கள் முதலில் மூவர்ணக் கொடியினை ஏற்றினர்.
- காஷ்மீரில் சியாச்சின் பனிப்பாறையின் மீதான கட்டுப்பாட்டைக் கைப்பற்ற இந்திய ஆயுதப் படைகள் மேற்கொண்ட ஒரு நடவடிக்கையின் குறியீட்டுப் பெயர் இதுவாகும்.
- சியாச்சின் ஆனது உலகின் மிக உயர்ந்த போர்க்களமாகும்.
- இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சியாச்சின் மோதலில் பிலாஃபோண்ட் லா கணவாய் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது.
- லடாக்கில் உள்ள பிலாஃபோண்ட் லா கணவாய் ஆனது இந்திய துணைக் கண்டத்தையும் சீனாவையும் இணைக்கும் பண்டைய பட்டுவழிப் பாதையில் உள்ளது.
- சால்டோரோ கணவாய் என்றும் அழைக்கப்படும் இது இமயமலையில் உள்ள சால்டோரோ முகட்டில் அமைந்துள்ள ஒரு மலைப்பாதை ஆகும்.




## சர்வதேச டர்பன் தினம் - ஏப்ரல் 13

- இது 2004 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 13 அன்று கொண்டாடப் படுகிறது.
- சீக்கியர்கள் தலைப்பாகையை (டர்பன்) தங்கள் மதத்தின் ஒரு கட்டாயப் பகுதியாக வைக்க வேண்டும் என்ற கடுமையான தேவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் டர்பன் தினமானது குரு நானக் தேவின் 552வது பிறந்த நாள் மற்றும் பைசாகி பண்டிகை போன்றவற்றைக் குறிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★